NO.

# PERIYAR UNIVERSITY TEACHERS ASSOCIATION ( PUTA)

SALEM - 636 011, TAMIL NADU

(Reg. No.112/2007)

## Coordination Committee

Member
**Dr. M. Jayaprakash**

Member
**Dr. M. Jeyaseelan**

Member
**Dr. D. V. Nithyanandan**

Member
**Dr. K. Sindhu**

Member
**Dr. J. Kalyana Sundar**

02.12.2024

பெரியார் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 02-12-2024 அன்று மாலை 5:15 மணிக்கு நடைபெற்றது.

அக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. சங்கத்தின் கணக்கு தொடர்பான பணிகளை திரு.I. லாரன்ஸ் ஆரோக்கியராஜ் அவர்களே புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படும் வரை கையாள அதிகாரம் வழங்கப்படுகிறது.

2. சங்கத்தின் புதிய உறுப்பினர் சேர்க்கையைத் தீவிரமாக மேற்கொள்ள சங்கத்தின் உறுப்பினர்கள் கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

3. சங்கத்திற்கான ஆண்டு சந்தா தொகையாக ரூபாய்.1200 நிர்ணயம் செய்யப்படுகிறது. அதனை சங்கத்தின் வங்கிக் கணக்கில் விரைந்து செலுத்த உறுப்பினர்கள் கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

4. சங்கத்தின் தேர்தல் நடத்துவதற்கான தேர்தல் அதிகாரியாக முனைவர் இரா.ராதாகிருஷ்ணன், பேராசிரியர், நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறை அவர்கள் நியமிக்கப்படுகிறார். அவருக்கு சங்கத் தேர்தல் தொடர்பான அனைத்து பணிகளையும் மேற்கொள்ள இக்குழு அதிகாரம் வழங்கி அதற்கான பணிகளை விரைந்து மேற்கொள்கிறது.

5. பல்கலைக்கழகத்தில் தகுதி நிலை மேம்பாடு பெற தகுதியான பேராசிரியர்களுக்கு அவர்களின் தகுதி நிலை மேம்பாட்டினை விரைவாக வழங்க ஆவன செய்யுமாறு மாண்பமை துணைவேந்தர் அவர்களையும் உயர்திரு பதிவாளர் அவர்களையும் சங்கம் கேட்டுக் கொள்கின்றது.

6. ஏற்கனவே தகுதி நிலை மேம்பாடு பெற்ற ஆசிரிய பெருமக்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலைவைத் தொகையை விரைந்து வழங்க ஆவன செய்யுமாறு சங்கத்தின் சார்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

7. தருமபுரி முதுநிலை விரிவாக்க மையத்திற்கு பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ள உயிர் தொழில்நுட்பவியல் துறையின் இணைப்பேராசிரியர் முனைவர் என். இளங்கோவன் அவர்களை அவரின் உடல் நலம் கருதி மீண்டும் பல்கலைக்கழகத் துறைக்கு பணி இடமாற்றம் செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

8. சங்கத்தின் சார்பில் "Role of Teachers Union in the promotion of University and Higher Education" என்னும் தலைப்பில் கருத்தரங்கு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதற்கு பல்கலைக்கழக அனுமதி பெற்று வளாகத்திலேயே நடத்த தீர்மானிக்கப்படுகிறது.

9. சங்கத்தின் செயல்பாடுகளை முன்னெடுக்க ஒருங்கிணைப்புக் குழு அமைத்து சங்கப் பணிகளை மேற்கொள்ள ஆதரவளிக்கும் மாண்பமை துணைவேந்தர் அவர்களுக்கும், உயர்திரு பதிவாளர், சங்க உறுப்பினர்கள், பல்கலைகழக ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்கள் மற்றும் ஊடக நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் சங்கம் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

2/12/24

Jeyaseelan
2/12/24

02/12/24